


## வங்கிச் செயற்பாடு புதனில் மட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 18
அரசாங்கத்தின் எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் வகையில், நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளும் பிரதிப் புதன் »15

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 112

புதன்கிழமை
18 மார்ச் 2026

பங்குனி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50

## இன்னும் இரு வாரங்களில் நாட்டில் மீண்டும் மின்தடை?

### சானக எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 18
இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டில் மின்தடை ஏற்படுவதற்குச் சாத்தியம் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் தற்போது இருப்பிலுள்ள டீசல் »15

# எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்வதற்குத் தயார்

- நட்பு நாடுகள் உதவிக்கு வருகை
- தனியார் இறக்குமதிக்கு அனுமதி
- போதிய எரிவாயுவும் கையிருப்பில்

### ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 18
நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே, பொதுமக்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். »15

## மின்வெட்டுக்கு அவசியமில்லை

### எதிர்கால நிலைமைகள் தொடர்பில் இப்போது தீர்மானிக்க முடியாது

### ஜனாதிபதி அநுர வெளிப்படை



கொழும்பு, மார்ச் 18
மின்வெட்டுக்குத் தற்போது அவசியமில்லை. எனினும் எதிர்கால நெருக்கடிகள் தொடர்பில் தற்போது எந்தத் »15

மின்சார வாகனங்களை

## பகற்பொழுதில் 'சார்ஜ்' செய்க

### ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18
மின்சார வாகனங்களைப் பயன்படுத்துபவர்கள், அவற்றுக்குப் பகற் பொழுதில் சார்ஜ் ஏற்றுமாறு ஜனாதிபதி அநுர கோரிக்கை விடுத்துள்ளார்.
மாலை 6 மணி முதல் இரவு »15



## யாழ்ப்பாணத்தில் நேற்று ம.எண்ணெய் விநியோகம்

விரிவு பக்கம்:- 15

கறுப்புக்கொடி விவகாரம்

## பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் விசாரணைக்காக அழைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 18
இலங்கையின் சுதந்திரதினத்தன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டு, பதிலாக கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மூவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் »15

முச்சந்தி முராளி

"முந்தி வெள்ளைக்கொடி விவகாரம்,
இப்ப கறுப்புக்கொடி விவகாரம்
கண்டியளோ"

வடக்கு மாகாணத்தில்

## ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் பாதீனிய ஒழிப்புச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
வடக்கு மாகாணத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாதீனிய ஒழிப்புச் செயற்றிட்டத்தை மேற்கொள்வது என்றும், ஏப்ரல் மாதத்தின் இறுதி »15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 4378
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள்: 14 21 58 79
விசேட எழுத்து R

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 1445
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 20 21 43 45

**NLB ஜய**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 0404
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள்: 4 3 4 9

**மெகா பவர்**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2484
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள்: 13 37 68 73

**மஹஜன சம்பத**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 6136
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள்: 1 8 6 9 9 5

**தன நிதானய**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2166
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள்: 01 04 28 33
விசேட எழுத்து E

**சுப தவசக்**
திகதி 17.03.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 0252
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 13 15 65

# எரிபொருள் ஒதுக்கீட்டு முறைமை காலவரையறையின்றித் தொடரும்

**கொழும்பு, மார்ச் 18**
**உலகளாவிய எரிபொருள் சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை காலவரையறையின்றித் தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும் ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால், சர்வதேச கப்பல் போக்குவரத்தில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. அவசர காலங்களில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எரிபொருளை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. அத்துடன் சீனாவிடமிருந்தும் உதவிக்கான வாக்குறுதி கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை எதிர்காலத்தில் டிஜிற்றல் பணப்பரிமாற்ற முறையுடன் இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (க-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0844
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கம்: 2 9 1 0 0 2

**Super Ball**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3110
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம்: 10 21 34 55

**சனிதா**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம்: 05 39 42 47
வெற்றி வாரம் 5271

**SASIRI**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0940
வெற்றி இலக்கம்: 07 31 42

**லக்ன ராசி**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம்: 16 30 39 51
சீட்டிழுப்பு வாரம் 4822

**KAPRUKA**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 33
வெற்றி இலக்கம்: 19 43 49 67
வெற்றி வாரம் 2286

**அத கோடிபதி**
திகதி 17.03.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம்: 03 33 59 65
வெற்றி வாரம் 2936

## கியூ.ஆர்.மோசடியெனில் கடும் சட்டநடவடிக்கை

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 18
எரிபொருள்களுக்கான கியூ.ஆர் குறியீட்டு முறைமையில் மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நாடுமுழுவதும் கியூ.ஆர். குறியீட்டு முறையிலான எரிபொருள் விநியோக முறையை பொதுமக்கள் பயன்படுத்தும்போது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறு, அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கியூ.ஆர். குறியீட்டு முறையைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள், அதில் மோசடி செய்பவர்கள் அல்லது அதன் நடைமுறைப்படுத்தலுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக பொலிஸாரால் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கும்வகையில் நடமாடும் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒழுங்கைப் பராமரிக்கவும் இந்தத் திட்டத்துக்கு ஆதரவளிக்கவும் மேலதிக உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் போது பொதுமக்கள் பொறுமையுடனும், பொலிஸாருக்கு ஒத்துழைப்புடனும் செயற்படவேண்டும்-என்றார். (க-இ)

## எரிபொருள் ஒதுக்கீடு போதியதாக இல்லை

### முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 18
கியூ.ஆர். முறைமையின்கீழ் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீடு, தங்களின் நாளாந்த வாழ்வாதாரத்தைப் பேணுவதற்குப் போதுமானதாக இல்லை என முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டிகளுக்கு தற்போது வாரத்திற்கு 15 லீற்றர் எரிபொருள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி ஓட்டுதலையே முதன்மை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களுக்கு இந்த அளவு மிகவும் குறைவானது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வழமையான சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்க வாரத்துக்குக் குறைந்தது 35 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகின்றது என்றும் முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஒதுக்கீட்டில் திருத்தம் செய்யப்படாவிட்டால், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். முச்சக்கரவண்டி ஓட்டுநர்களைப் போன்றே, பாடசாலை போக்குவரத்துச் சேவையாளர்கள் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களும் தற்போதைய ஒதுக்கீடு தொடர்பாக அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (எ-இ)

## 57,000 மெற்றிக்தொன் டீசல் 47,000 மெ.தொன் பெற்றோல்

*10 நாள்களில் விற்பனை*

கொழும்பு, மார்ச் 18
மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம் ஆரம்பமான முதல் 10 நாள்களுக்குள் மட்டும் 57 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் மற்றும் 47 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளுக்கான கேள்வி சடுதியாக அதிகரித்ததால், ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் விநியோகிக்கப்படும் அளவு குறுகிய காலத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது என்றும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாடுமுழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்புநிலையங்களிலும் கையிருப்பு மற்றும் விற்பனை சரிபார்ப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நிலையத்துக்கும் வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் கியூ.ஆர். குறியீட்டு முறைமையின்கீழ் விற்பனை செய்யப்பட்ட அளவு ஆகியவற்றை அதிகாரிகள் சோதனையிடவுள்ளனர் என்றும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (க-இ)

## ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் பயணம்

சிங்கப்பூர், மார்ச் 18
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேலதிக மருத்துவச் சிகிச்சைக்காக, கடந்த ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூர் பயணித்துள்ளார்.
மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக சுமார் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர் கடந்த வாரம் இங்குள்ள தனியார் மருத்துவமனையில் மூன்று நாள்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மூன்று மாதங்களில் மட்டும்

# ரூ.20 பில். பெறுமதியான போதைப்பொருள் மீட்பு!

**கொழும்பு, மார்ச் 18**

**இலங்கைக் கடற்படையினர் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 20 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்களைக் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மிரிஸ்ஸ பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற படகொன்றிலிருந்து 123 கிலோகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. இதன் சந்தைப் பெறுமதி 3 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. பேருவலைக் கடற்பரப்பில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மற்றொரு படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 71 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க, எவ்விதத்திலும் போதைப்பொருள் நாட்டுக்குள் நுழைவதற்கு இடமளிக்கப்போவதில்லை -என்றார். (ச-இ)

## மேர்வின் வழக்கில் சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, மார்ச் 18

சட்டவிரோதமான முறையில் சொத்துகளை ஈட்டியதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

2010ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அமைச்சராகப் பணியாற்றியபோது, தனது சட்டபூர்வமான வருமானத்தையும் மீறி சுமார் 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துகள் மற்றும் காணிகளைச் சட்டவிரோதமான முறையில் ஈட்டியதன் மூலம் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளார் எனக் கூறி, முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது. (ச-இ)

## பிளாஸ்ரிக் போத்தல்களுக்கு அடுத்தமாதம் முதல் தடை!

கொழும்பு, மார்ச் 18

சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் உணவுப் பெட்டிகளுக்கான தடை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

2025 ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட 6 மாத கால அவகாசம் மார்ச் மாதத்துடன் நிறைவடைகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## கியூ.ஆர்.நடைமுறையால் புதிய வாகனங்கள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 18

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள எரிபொருள் கியூ.ஆர். நடைமுறை காரணமாக, புதிதாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை துறைமுகத்திலிருந்து கொண்டு வருவதிலும், காட்சியறைகளில் பராமரிப்பதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடையும் போது, அவற்றில் மிகக் குறைந்த அளவே எரிபொருள் இருக்கும். அங்கிருந்து கொழும்புக்கு வாகனங்களைக் கொண்டுவர எரிபொருள் இன்றி இறக்குமதியாளர்கள் திண்டாடுகின்றனர். கியூ.ஆர். முறைமைக்கு வாகனப் பதிவு இலக்கம் அவசியம். ஆனால், இறக்குமதி செய்யப்படும் புதிய வாகனங்கள் பதிவுசெய்யப்படாதவை என்பதால், அவற்றுக்கு எவ்வாறு எரிபொருள் பெறுவது என்பதில் சட்டரீதியான சிக்கல் உள்ளது - என்றார். (ச-இ)

## வாகனங்களை மாற்றியவர்கள் கியூ.ஆர். நடைமுறையால் அவதி

கொழும்பு, மார்ச் 18

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வாகன உடைமை மாற்றம் செய்தவர்கள், எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவதிப்பட்டுள்ளனர். நாட்டில் எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்தும் நோக்குடன், தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கொரோனாக் காலப்பகுதியில் வாகனங்களுக்குப் பதிவுகளை மேற்கொண்டோர், தொலைபேசி இலக்கத்தையும், வாகனத்தையும் மாற்றம் செய்யாது வைத்திருந்தால் இலகுவாக கியூ.ஆரைப் புதுப்பித்துக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனினும் பழைய வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்கள் அல்லது வாகன உடைமை மாற்றம் செய்தவர்கள் இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே இதற்கு தொழில்நுட்ப ரீதியான அணுகலை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-10)

## புதன்கிழமை தான் லீவு குடுக்கோனுமோ?

வேலையெண்டு வந்திட்டால் மட்டுமில்லை, வேலை நாளை 'கட்' பண்ணிறதெண்டு வந்தாலும் கூட அதிலையும் என்னென்ன நுணுக்கங்கள் இருக்கெண்டு வெளிநாட்டுக்காரரிட்டத்தான் நாங்கள் பாடம் படிக்கோனும் போல கிடக்குது. எரிபொருளை மிச்சம் பிடிக்கிறதுக்காக அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு கிழமையில நாலுநாள் தான் வேலை எண்ட திட்டத்தை அரசாங்கம் கொண்டந்திருக்கெல்லோ. அதின்படி, ஒவ்வொரு கிழமையிலையும் சனி, ஞாயிறு, புதன் கிழமையளில அரசாங்க ஒபீஸ் ஒண்டும் திறக்காது. ஆஸ்பத்திரி, குடிதண்ணிச் சேவை மாதிரியான அத்தியாவசிய சேவையளைக் குடுக்கிற ஒப்பீஸ்கள் மட்டும் இயங்கும். உந்தத் திட்டத்தில புதன்கிழமை லீவு குடுக்கிறவிசயத்துக்குத்தான் கடும்எதிர்ப்புக் கிளம்பியிருக்குது.

எரிபொருளை மிச்சம் பிடிக்கோனும் எண்டால், வெள்ளி அல்லது திங்கட்கிழமையைச் சேர்த்து லீவைக் குடுத்தால், சனி ஞாயிறோட சேர்த்து தொடர்ச்சியா மூண்டு நாள் லீவு வரும். அண்டைக்கு பள்ளிக்கூடலைன் ஓடுற வாகனங்கள், பஸ்கள், ரெயில், அரசாங்க ஒப்பீஸ் வாகனங்கள் எல்லாத்தையும் ஓடவிடாமல் நிப்பாட்டலாம். அதைமாதிரி அரசாங்க ஒப்பீஸ்களில கரண்டைப் பாவிக்கிறதையும் நிப்பாட்டலாம். இப்பிடிச் செய்தால் எரிபொருள் மிச்சமாகும். அதால கொஞ்ச நாளைக்கு இருக்கிற எரிபொருளை வைச்சுக்கொண்டு நிண்டுபிடிக்கலாம். ஆனா, கிழமையின்ர நட்டநடு நாளா இருக்கிற புதன்கிழமை லீவு குடுத்தால் என்ன நடக்கும்? அதிலையும் வெளிமாவட்டங்களில வேலை செய்யிற அரசாங்க உத்தியோகத்தர்மார் என்னபாடு படப்போயினம் எண்டு ஒருக்கா நினைச்சுப் பாருங்கோ. வழக்கமா அவை திங்கள் வீட்டையிருந்து வெளிக்கிட்டால் வெள்ளிதான் திரும்ப வருவினம். ஆனால் இப்ப கொண்டுவந்த 'புதன்கிழமை' லீவு எண்ட திட்டத்தால, செவ்வாய்க்கிழமை வேலை முடிஞ்சு வீட்டுக்கு ஓடோணும், புதன்கிழமை வீட்டிலல குந்தியிருக்கோனும் (அப்பிடியில்லாட்டி குவார்ட்டஸில விட்டத்தை வெறிச்சுப் பார்த்தபடி படுத்திருக்கோனும்) திரும்ப வியாழக்கிழமை வேலைக்கு வெளிக்கிடவேணும். அதால அவையின்ர போக்குவரத்துக்கான செலவும், பாவிக்கிற எரிபொருளும் இன்னொரு மடங்கு கூடுமே தவிர குறையாது.

அதுக்குள்ள இஞ்ச சில விஞ்ஞானியள் - "திங்களோ, வெள்ளியோ லீவைக் குடுத்தால் தொடர்ந்து மூண்டு நாள் லீவு வரும். இதுதான் சாட்டெண்டு எல்லா அர சாங்க உத்தியோகத்தர்மாரும் கிழமைக்கு கிழமை ரூருக்கு வெளிக்கிட்டு, ஃபன் பண்ண வெளிக்கிட்டிடுவினம்" எண்டு சொல்லி தங்கட வித்துவத்தைக் காட்டுகினம். இஞ்ச கிழமைக்கு கிழமை ரூர் போற அளவுக்கு வசதியா எந்த அரசாங்க உத்தியோகத்தர்மாரும் இல்லையெண்டது அவைக்கு எப்பிடி விளங்கும்? முந்தி கோத்தாவுக்கு இப்பிடித்தான் சிலர் பிழையான அட்வைஸ் குடுத்து, அந்தாள் அவை சொன்னதுதான் மந்திரமெண்டு நிண்டு ஆடி பிறகு அடங்கினவர். அதே குரூப் தான் இப்ப அநுரவுக்கும் அட்வைஸ் சொல்லுகினமோ தெரியேலை. ஏனெண்டால் கியூ. ஆரை. கொண்டு வாறதிலையும் சரி, இப்ப புதன்கிழமை லீவு விட்டதிலையும் சரி கனக்கச் சறுக்கல். அதோட சனத்தின்ர நன்மையையோ, நாட்டின்ர நன்மையையோ அரசாங்கம் கொஞ்சமும் யோசிக்கேலை. உந்தப் புதன் கிழமை லீவால இன்னும் எரிபொருள் வேளைக்கு முடியுமோ தவிர மிஞ்சப் போறேலை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்

உங்கள் ராசிக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் 24.4.2028 வரை சனிபகவான் லாப வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால், திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும். மனச்சோர்வு நீங்கும்; மனதில் புதுச் சிந்தனைகள் தோன்றும். குடும்பத்தில் நிம்மதி தங்கும்.
குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளை வரத்துக்காகக் காத்திருக்கும் அன்பர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். ஊரே மெச்சும்படி திருமணம் முடிப்பீர்கள். நகை ஆபரணங்கள் சேரும்.

சகோதரர்களுடனான கசப்பு உணர்வு நீங்கும். சகோதரிக்கு நல்ல விதத்தில் திருமணம் முடியும். அரசாங்க அதிகாரிகளால் உதவிகள் உண்டு. வாழ்க்கைத்துணைவர் வழியில் மதிப்பு மரியாதை கூடும். மீனத்தில் அமரும் சனிபகவான், 3ஆம் பார்வையாக உங்கள் ராசியைப் பார்ப்பதால் தைரியமாக முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். எனினும் அவ்வப்போது அலைச்சல், டென்ஷன் வந்து போகும். முன்கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.



## இடபம்

சனிபகவானின் சஞ்சாரப்படி அவர் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும். ஆனாலும் பூர்விகச் சொத்துப் பிரச்சினைகள், வாகனப் பயணத்தில் கவனத்துடன் செயற்படவேண்டும். இல்லையெனில் சொத்துகள் மூலம் விரயம் வழக்குகள் வந்துசேரலாம். வாகனப் பயணத்தில் சிறு சிறு விபத்துகள் வரக்கூடும்.
அதேபோல் சனிபகவான் உங்களின் 5ஆம் வீட்டைப் பார்ப்பதால், பிள்ளைகளின் நடவடிக்கைகளில் கண்காணிப்புத் தேவை. தவறான வழிகளில், பொழுதுபோக்குகளில் அவர்களின் கவனம் செல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அன்புடன் வழிநடத்துங்கள்.
சனிப்பெயர்ச்சி நிகழ்ந்து அடுத்த ஓரிரு மாதங்கள் வரை தந்தையுடன் கருத்துமோதல், வீண் செலவுகள் வந்து நீங்கும். அதேநேரம், அவர் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பயணிக்கும் காலமான 2.4.2026 முதல் 14.4.2027 வரை, பொன்பொருள் சேரும். புது வேலை அமையும்..

அடுத்த வருடம் (2027) ஏப்ரல் முதல் ஒரு வருட காலத்தில், சிலருக்குப் புது வீடு அமைய வாய்ப்பு உண்டு. சனிபகவான் ரேவதியில் செல்லும் அந்தக் காலத்தில், திருமணக் காரியங்கள் கூடி வரும். சிலருக்குக் குழந்தைப்பாக்கியம் கிடைக்கும்.
சனிபகவான் வக்ர சஞ்சாரக் காலத்தில் 15.7.2026 முதல் 30.11.2026 வரை மற்றும் 28.7.2027 முதல் 13.12.2027 வரை வீண் அலைச்சல், காரியத்தடைகள் வரக்கூடும். முன்கோபம், சிறியளவில் உடல் நலக் குறைபாடுகள் ஏற்படலாம்.

**வியாபாரிகளே, வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களே, உங்களின் நிர்வாகத் திறமைகள் கூடும். புது வாய்ப்புகள், பொறுப்புகள் தேடிவரும். மூத்த அதிகாரிகள் உங்களின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். ஒரு சிலர், சலுகைகள் அதிகமுள்ள வேலைக்கு மாறுவார்கள்.**

# முத்தரிப்புத்துறை றோ.க.த.க.வில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

## பாடசாலை நிர்வாகம் சுட்டிக்காட்டு

**மன்னார், மார்ச் 18**
**மன்னார் முத்தரிப்புத்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தமிழ், அரசியல் விஞ்ஞானம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய உயர்தரப் பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று பாடசாலை நிர்வாகத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் எடுத்துக் கூறினர்.**

பாடசாலைக்கு களப்பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.
ஆரம்பப்பிரிவுக்குப் போதுமான ஆசிரிய ஆளணி இன்மையால், 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரே வகுப்பில் கற்கவேண்டியுள்ளது. இதனால் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் சாவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.
விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்குப் போதுமான வளங்கள் இல்லை, மேலும் விஞ்ஞான ஆய்வுகூடச் சீரமைப்பு, நூலகச் சீரமைப்பு, தொழில்நுட்ப ஆய்வுகூடத்துக்கான தொழில்நுட்பச் சாதனங்கள், கல்வி மறுசீரமைப்புக்கான தொழில்நுட்பச் சாதனங்கள் இன்மை, திறன் வகுப்பறையுடனான இலத்திரனியல் கற்கைக்குரிய போதுமான வளம் இன்மை, மலசலகூடச் சீரமைப்பு போன்ற கோரிக்கைகளும், குறைபாடுகளும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. (க-246)




## குடும்பம் சமுதாயத்தின் ஆணிவேர்

*'திருமணமான பெண்களே உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும். திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்.'(1கொலோ 3 : 18-20)*

குடும்பம் சமூகத்தின் ஆணிவேர். எதிர்காலத் தலைமுறைகளின் அடித்தளம். இன்று பல்வேறு காரணங்களால் ஆட்டம் கண்டு தான்தோன்றித்தனமாக தறிகெட்டுச் சென்றுகொண்டிருக்கிறது. தமது கடமைகள், பொறுப்புகளை உணரத் தவறுகின்றனர். கடவுள் முன்னிலையில் இன்பத்திலும், துன்பத்திலும், உடல்நலத்திலும், நோயிலும், உயர்விலும், தாழ்விலும் சமபங்கேற்பதுடன் பிள்ளைகளை அக்கறையுடன் வளர்ப்போம் என்ற திருமண வாக்குறுதிகளைப் புறந்தள்ளி உறவு விரிசல்களிலும், சந்தேகத்திலும், விவாகரத்திலும் பல குடும்பங்கள் சிதைந்து போகின்றன. களங்கமற்ற பரஸ்பர அன்பும், வெளிப்படைத்தன்மையும், விட்டுக்கொடுப்பும், இறைநம்பிக்கையும் வளமான குடும்பத்தைக் கட்டியெழுப்பும் பலமான தூண்களாகும். குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் இணைந்து பயணிக்கும் சக்கரங்களாகும். இருவரும் ஒத்திசைவாக இயங்கும் போது வாழ்வெனும் தேர் அழகாக உருளும். இறைவன் இணைத்த குடும்ப பந்தத்தை மனிதன் பிரித்தலாகாது என்பதை நினைவிற்கொள்வோம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 18
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத் தொடரின் 48ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், இளஞ்சைவப் புலவர், பிரசங்கச்சுடர் நித்திய பாபுதரனின் 'கிரிவுஞ்சப் படலம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# யாழ் எழுச்சி மக்கள் சந்தை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாணத்தின் தனித்துவமான உற்பத்தித் திறனையும், யாழ்.மண்ணின் தொழில் முனைவோரின் பெருமிதத்தையும் பறைசாற்றும் வகையில் யாழ் எழுச்சி மக்கள் சந்தை-2026 நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளது. விவசாயம், கடற்றொழில் மற்றும் உள்ளூர் கைவினைப் பொருள்களைத் தேசிய ரீதியிலான சந்தை வாய்ப்புகளுடன் இணைக்கும் தனித்துவமான நிகழ்வாகக் குறித்த நிகழ்வு யாழ்.சமூகச் செயற்பாட்டு மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## காகித உத்தரவுகள் பயனளிக்கா..!

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விநியோக நெருக்கடியானது, இலங்கை உட்படப் பல நாடுகளின் பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பைச் சோதனைக்குள்ளாக்கியுள்ளது. இந்த நெருக்கடியைக் கையாள்வதற்காக இலங்கை அரசாங்கம் வாராந்தம் புதன்கிழமையை பொது விடுமுறை தினமாக அறிவித்துள்ளது. அரச நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விடுமுறையின் அடிப்படை நோக்கம், எரிபொருள் மற்றும் மின்சார நுகர்வைக் கட்டுப்படுத்தி, இருப்பிலுள்ள எரிபொருளைக் கொண்டு நீண்டகாலம் முகாமைத்துவம் செய்வதாகும். தற்போதைய சூழலில் அரசாங்கத்தின் இந்த நகர்வு வரவேற்கத்தக்கது என்றாலும், அதன் வெற்றி என்பது வெறும் அறிவிப்புகளுடன் மட்டும் தங்கியிருக்கப் போவதில்லை.

அரசாங்கம் எடுக்கும் இத்தகைய நெருக்கடி முகாமைத்துவ நடவடிக்கைகள் வெற்றியடைவது பொதுமக்களின் நடத்தையிலேயே நூறு வீதம் தங்கியுள்ளது. 'விடுமுறை' என்பது ஓய்வெடுப்பதற்கோ அல்லது சுற்றுலா செல்வதற்கோ வழங்கப்பட்ட ஒன்றல்ல; மாறாக, நாட்டின் எரிபொருள் சேமிப்புக்காக தனிமனிதர்கள் தங்களை வருத்திக்கொண்டு வழங்கும் ஒரு பங்களிப்பாகும். இந்த யதார்த்தத்தை உணர்ந்து மக்கள் ஒத்துழைக்கத் தவறினால், அரசாங்கம் எதிர்பார்க்கும் சாதகமான விளைவுகள் கானல் நீராகவே போய்விடும்.

பிரதானமாக, கல்வித்துறைக்கான விடுமுறையில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு புதன்கிழமைதோறும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் அன்றைய தினம் வீடுகளிலேயே தங்கியிருக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறன்றி, மாணவர்கள் வேறு தேவைகளுக்காக வீதிகளுக்கு இறங்கினால், போக்குவரத்து நுகர்வு குறையப்போவதில்லை. இந்த இடத்தில்தான் தனியார் கல்வி நிலையங்களின் பொறுப்பு கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. கடந்த கால அனுபவங்களை நோக்கும்போது, அரசாங்கம் அறிவிக்கும் பொது விடுமுறை தினங்களை தனியார் கல்வி நிறுவனங்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, நாள் முழுவதும் வகுப்புகளை நடத்தும் போக்கைக் காணமுடிகிறது. வடமாகாணத்தில் இத்தகைய செயற்பாடுகள் முன்னரும் விவாதப் பொருளாகின. மாணவர்களின் மைதானச் செயற்பாடுகளுக்காகவோ அல்லது சமயக் கடமைகளுக்காகவோ சில தினங்களில் வகுப்புகளைத் தவிர்க்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களைப் பல நிறுவனங்கள் கண்டுகொள்ளவில்லை. வெள்ளிக்கிழமைகளில் வகுப்புகளைத் தவிர்க்குமாறு மாவட்டச் செயலகம் விடுத்த அறிவித்தல்களை மீறியும், இன்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் தனியார் வகுப்புகள் இடம்பெற்றுதைக் காணமுடிகின்றது.

தற்போது கல்வி அமைச்சு, புதன்கிழமைகளில் தனியார் வகுப்புகளும் நடத்தப்படக்கூடாது எனத் தெளிவாக அறிவித்துள்ளது. இந்த உத்தரவு காகிதத்தில் மட்டுமே தங்கிவிடக்கூடாது. கல்வி அமைச்சும், மாவட்ட நிர்வாகமும் இதனை மிக இறுக்கமாகக் கண்காணிக்க வேண்டியது கட்டாயமாகும். அறிவிப்புகளை விடுவதுடன் எமது கடமை முடிந்துவிட்டது என்று அதிகாரிகள் மெத்தனமாக இருந்தால், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்ட இந்த நடைமுறை நிச்சயம் தோல்வியைத் தழுவும். அதிகாரிகள், இந்தத் தடையை மீறும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேவேளை, பெற்றோரும் தமது பிள்ளைகளை இத்தகைய வகுப்புகளுக்கு அனுப்பாது ஒத்துழைக்க வேண்டும். எம்மால் கையாள முடியாத ஒரு சிக்கலால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை வெற்றிகரமாகக் கடப்பதற்கு ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பும் அவசியம். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளை ஓரமாக வைத்துவிட்டு இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுநலத்துடன் அனைவரும் சிந்திக்கவேண்டியது அவசியம். அதுவே இப்போதுள்ள தேவையுமாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






### பொய்யாமொழி

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு**

**பொருள்:** உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு. அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.




புதன்கிழமைகளில்

## சுகாதார அமைச்சின் சில பிரிவுகள் வீட்டிலிருந்தே இயங்க அனுமதி!



கொழும்பு, மார்ச் 18

**சர்வதேச எரிபொருள் நெருக்கடி மற்றும் உள்நாட்டு எரிபொருள் சிக்கனத்தைக் கருத்திற்கொண்டு, சுகாதார அமைச்சின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் அதிகாரிகள் ஒவ்வொரு புதன்கிழமையும் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதன்படி மறுஅறிவித்தல் வரை காசல் வீதியில் அமைந்துள்ள புதிய அமைச்சுக் கட்டடத்தின் அனைத்துப் பிரிவுகள், நாரஹேன்பிட்டியில் உள்ள மலேரியா ஒழிப்புப் பிரிவின் அனைத்துப் பிரிவுகள், தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம், சுகாதார மேம்பாட்டுப் பணியகம் என்பன வீட்டிலிருந்து பணியாற்ற வேண்டும்.


அமைச்சின் ஏனைய பிரிவுகள் புதன்கிழமைகளில் குறைந்தபட்ச ஊழியர்களைக் கொண்டு இயங்குவதை உறுதி செய்யவேண்டும் என்றும் அனில் ஜாசிங்க அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

## எரிபொருள் ஒதுக்கீடு சனியுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 18

தற்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு எதிர்வரும் சனிக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைவதுடன், ஞாயிற்றுக்கிழமை மீண்டும் புதுப்பிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கியூ.ஆர். குறியீட்டு முறைமையை அறிமுகப்படுத்திய தன் மூலம் நாட்டின் எரிபொருள் நுகர்வை 20 வீதத்தால் குறைக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. தற்போது கையிருப்பிலுள்ள எரிபொருளின் அடிப்படையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரம் வரை போதுமான எரிபொருள் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## எரிபொருள் கடத்திய ஓட்டோச்சாரதி கைது

கொழும்பு, மார்ச் 18

பண்டாரகம நகரில் சட்டவிரோதமான முறையில் முச்சக்கரவண்டியொன்றில் எரிபொருளைக் கடத்திச் சென்ற ஒருவரை பண்டாரகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.


சந்தேகநபரிடமிருந்து நான்கு பிளாஸ்ரிக் கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 80 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பண்டாரகம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## புதன்கிழமைகளில் ரயில் சேவை மட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 18

பிரதி புதன்கிழமை அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அன்றைய தினம், தொடருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்படும் எனத் தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## மீன்கள் ஏற்றுமதி முடக்கம்; உள்நாட்டில் விலை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக சர்வதேச விமானப் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக இலங்கையின் மீன் ஏற்றுமதி பாதிப்படைந்துள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோலித கமல் ஜினதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய மீன்கள் உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதால், மீன்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடியால் விமானப் போக்குவரத்துப் பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளமை ஏற்றுமதித் துறையில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது-என்றார். (ச-இ)

**நாளை** வியாழக்கிழமை - பங்குனி 05 19.03.2026

சுபநேரம் : 07.48 - 09.18
ராகுகாலம் : 01.48 - 03.18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிபொருள் நிலையங்கள் அருகே விசேட பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 18

எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் நிலவும் வாகன நெரிசல் மற்றும் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பொலிஸார் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று போக்குவரத்து மற்றும் வீதிப்பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் போர்ச்சூழல் காரணமாக உலகநாடுகளைப்போலவே இலங்கையிலும் எரிபொருள் விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் நாட்டில் உள்ள எரிபொருள் கையிருப்பினை முறையாகக் முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காகவே கியூ.ஆர். குறியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், முதல் வாகனப் பிரிவுகளுக்கமைய எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. எனவே, அரசாங்கம் முன்னெடுத்துள்ள இந்த எரிபொருள் முகாமைத்துவத் திட்டத்துக்குப் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வரிசைகளில் காத்திருக்கும் போது பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும், ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்துங்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சுற்றுலாத்துறைக்கு விசேட QR முறைமை

கொழும்பு, மார்ச் 18

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றத்தால் நாட்டில் மீண்டும் எரிபொருள் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், சுற்றுலாத்துறையினருக்காக பிரத்தியேகமான விசேட கியூ.ஆர். குறியீட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்த சுற்றுலாத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க இதுகுறித்துத் தெரிவித்ததாவது–

இலங்கை சுற்றுலா அதிகாரசபையில் உத்தியோகபூர்வமாகப் பதிவுசெய்துள்ள சுற்றுலாச் சேவை வழங்குநர்களுக்கு மட்டுமே இந்த விசேட கியூ.ஆர். குறியீடு வழங்கப்படும்.

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் நிற்பதைத் தவிர்த்து, இலகுவாகவும் முன்னுரிமை அடிப்படையிலும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும்- என்றார். (ச-இ)



## மேலதிக வகுப்புக்களுக்கும் புதன்கிழமைகளில் தடை

கொழும்பு, மார்ச் 18

புதன்கிழமைகளில் மேலதிக வகுப்புகளை நடத்துவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

முன்னதாக எரிபொருள் விநியோகச் சிக்கலைக் கருத்திற்கொண்டு, அனைத்து அரச பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு புதன்கிழமையும் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## தனியார் பேருந்து சேவை 50 வீதமாக முடங்கலாம்!

கொழும்பு, மார்ச் 18

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் டிப்போக்கள் ஊடாக தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கும் நடைமுறையால் நாட்டில் பொதுப்போக்குவரத்து பாதிக்கப்படும் எனத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள சுமார் 13,000 தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்க தற்போதுள்ள டிப்போக்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. இது நீண்ட வரிசைகளுக்கு வழிவகுக்கும். தனியார் பேருந்துகள் சேவையை முடித்துவிட்டு மாலை நேரத்திலேயே எரிபொருள் பெற வருகின்றன. ஆனால், டிப்போக்கள் மாலை 5 மணிக்கே மூடப்படுவதால், இரவு நேரங்களில் டீசல் பெற முடிவதில்லை. உரிய நேரத்தில் எரிபொருள் கிடைக்காவிடின், மறுநாள் காலையில் பேருந்துகளை இயக்கமுடியாமல் வீதியிலேயே நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும். இதன் விளைவாக 13,000 பேருந்துகளில் 6,500 பேருந்துகள் மாத்திரமே ஓடும் நிலை உருவாகும். எனவே சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு முன்னுரிமை வழங்கவேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## 360 பவுண் நகை மோசடி; பெண்ணுக்கு சரீரப்பிணை

மன்னார், மார்ச் 18

மன்னாரில் பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 66 வயதுடைய பெண் ஒருவரை தலா 20 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல மன்னார் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட முக்கியமான சந்தேகநபர் ஒருவரின் சட்டவிரோத வருமானம் குறித்து சட்டவிரோதச் சொத்துகள் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணையில் கடத்தல் வருமானத்தில் ஒரு மாடிக் குடியிருப்பு, ஐந்து அறைகளைக் கொண்ட வீடு, ஒரு கார் மற்றும் சுமார் 360 பவுண் பெறுமதியான தங்க நகைகள் வாங்கப்பட்டுள்ளமை தெரியவந்தநிலையில் அந்தச் சொத்துகளை முடக்குவதற்கு மன்னார் மேல் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. இந்தநிலையில் பிரதான சந்தேகநபரின் மாமியாரான குறித்த பெண், இந்தச் சட்டவிரோத நகைகளை மறைக்க உடந்தையாக இருந்த குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டார். வழக்கை விசாரித்த நீதவான் சந்தேகநபரைத் தலா 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டார். (ச-இ)

## பல்கலைக்கழக விரிவுரைகளை இணையவழியில் நடத்துங்கள்!

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு.மார்ச் 18

நாட்டில் நிலவும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு, பல்கலைக்கழக விரிவுரைகளை இணையவழியில் முன்னெடுக்குமாறு அனைத்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் வசந்த லியனகே இதுகுறித்துத் தெரிவிக்கையில், கல்வி நடவடிக்கைகள் தடையின்றித் தொடர்வதை உறுதிப்படுத்துவதே இந்தத் தீர்மானத்தின் முதன்மை நோக்கமாகும். கோட்பாட்டு ரீதியான அனைத்து விரிவுரைகளும் முழுமையாக இணையவழியில் நடத்தப்படும். அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவ பீட மாணவர்களுக்கான செய் முறைப் பயிற்சிகள் சிறிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படும். ஒரு தொகுதி மாணவர்கள் ஒரு வாரம் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்து பயிற்சிகளை முடித்துவிட்டுச் செல்லலாம்.

எரிபொருள் நுகர்வைக் குறைக்க, கல்விசார் ஊழியர்கள் புதன்கிழமைகளில் 'வீட்டிலிருந்தே பணிபுரிதல்' முறையைப் பின்பற்றுவர். விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் அத்தியாவசியமான நேரடி அமர்வுகளில் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் - என்றார். (ச-இ)



காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி முகாமைத்துவத்துக்கு 3 குழுக்களை நியமித்தது அரசு!

**கொழும்பு, மார்ச் 18**

**மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் நாடு எதிர்நோக்கக்கூடிய பொருளாதார நெருக்கடி நிலையை முகாமைத்துவம் செய்வதற்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும், அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி மக்களுக்கு வழங்கவும், அந்தப் பணிகளை முகாமைத்துவம் செய்யவும் ஒரு குழுவும், அரச சேவைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது தொடர்பான பணிகளை முகாமைத்துவம் செய்வதற்கு மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒரு குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)



## நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்.நகர் II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ARV) குறிக்கப்பட்ட இடங்களில் ஏற்றப்பட்டு வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நல்லூர் தெற்கு சனசமூக கற்பகப் பிள்ளையார் கோவிலடியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை றக்கா வீதி இளம்சிங்கம் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ஆஸ்பத்திரி வீதி கோவில் வீதியிலும், நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை ராசாவின் தோட்டம் ஆருள்மாதா கோவிலடியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மாட்டின் வீதி சப்பல் வீதிச் சந்தியிலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை வேம்படி வீதி 2ஆம் குறுக்குத்தெருவிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை 4ஆம் குறுக்குதெரு OLR தேவாலயத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.புகைரத நிலைய வீதி வைரவர் கோவிலடியிலும் தடுப்பூசி ஏற்றப்படும். நாய்க்கு உரிமக் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (க)

## போதைமாத்திரைகளுடன் மல்லாகத்தில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 18

மல்லாகம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது, போதைமாத்திரைகள் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மல்லாகம் புகையிரத நிலையப் பகுதியில் வைத்து 28 வயதுடைய நபர் ஒருவர் 3 போதைமாத்திரைகளுடன் முதலில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில், மேலும் இருவர் 6 போதைமாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் விசாரணை செய்த போது, போதைப்பொருளை விற்பனை செய்த நபர் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-23)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.தெல்லிப்பழையின் மகாஜனக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்தச் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட நுண்ணுயியல்துறைப் பேராசிரியர்.கலாமதி முருகானந்தன் பிரதம விருந்தினராகவும், யாழ்.புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய அதிபர் பொன்னம்பலம் கேதீஸ்வரன், யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வுநிலை உப அதிபர் திருமதி மோகனவதனி ரவீந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (41-66)

## வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 18

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில், எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க)

## முட்டிக் கத்தரிக்காய்க்கு மட்டுவிலில் பெரும் கிராக்கி

யாழ்ப்பாணம்,மார்ச் 18

மட்டுவிலில் முட்டி வெள்ளைக் கத்தரிக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பங்குனி மாதத்தில் இந்தக் கத்தரிக்காய் மட்டுவிலில் அறுவடை செய்யப்படும். தற்போது பங்குனித் திங்கள் உற்சவ காலம் ஆரம்பமாகியுள்ளதால், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் முட்டிக்கத்தரிக்காயை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அங்கு ஒரு கிலோ முட்டிக் கத்தரிக்காய் 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. (க-17)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

யா/துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 மாணவர்களுக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கணேசன் தர்மதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரவங்கால் சிவசக்தி மண்டப நிறுவுநரும், லண்டன் வெஸ்டன் ஜுவலர்ஸ் நிறுவுநருமான வேலுப்பிள்ளை சிவசுந்தரம், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41-422)

## இ.போ.ச.பேருந்து மோதி கவிழ்ந்த கப்ரக வாகனம்!



யாழ்ப்பாணம், மார்ச் 18

வடமராட்சி மாலை சந்தைப் பகுதியில் பருத்தித்துறை பிரதான வீதியில் இ.போ.ச. பேருந்துடன் கப்ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் கப்ரக வாகனம் வாய்க்காலுக்குள் புரண்டு சேதங்களுக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து நேற்றுக் காலை மாலை சந்தி வைரவர் ஆலய பகுதியில் நடந்துள்ளது.

கப்ரக வாகனம் பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது முன்னே சென்ற மோட்டார் சைக்கிள் சடுதியாக நிறுத்த முற்பட்டபோது கப்ரக வாகன சாரதியும் தனது வாகனத்தைத் திடீரென நிறுத்தியுள்ளார்.

இதன்போது பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பேருந்து கப்ரக வாகனத்தை மோதித் தள்ளியதில் கப்ரக வாகனம் வாய்க்காலுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் அதிஷ்டவசமாக எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டுத் திவச அழைப்பு



தோற்றம் 20 . 11 . 1956

மறைவு 29 . 03 . 2025

(திதி:-பங்குனி அமாவாசை)

கடந்த 29.03.2025 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் ஸ்ரீஸ்காந்தன் வசந்தா

(உரிமையாளர் - அம்பாள் களஞ்சியம் (சிறி கடை)

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசக் கிரியைகள் இன்று (18.03.2026) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

36/1, முதலாம் ஒழுங்கை,
பிரம்படி உப ஒழுங்கை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS/31465) A

## மரண அறிவித்தல்

### சரஸ்வதி நல்லதம்பி



தோற்றம் 31.01.1947

மறைவு 17.03.2026

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி நல்லதம்பி அவர்கள் நேற்று (17.03.2026) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி (மருத்துவர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை (A.G.A) - முத்துபிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், குமரசிறி, பிறேமச்செல்வி (அவுஸ்ரேலியா), நேசநங்கை ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேவதி, ஜெயகணேஷ் (அவுஸ்ரேலியா), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஸ்ணவேணி மற்றும் காலஞ்சென்றவர்களான குகப்பிரசாதம், கோகிலாம்பிகை, நல்லைவரோதயன், கௌரியம்பாள், வேலாயுதமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தமிழ்ச்செல்வி, தனுப்பிரியா, காயத்திரி (அவுஸ்ரேலியா), கலையரசி, எழிலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2026) புதன்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
சோனெழு கோப்பாய் மத்தி, கோப்பாய்.
075 235 9909

(CS/31463) J-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 03 . 1944

மறைவு 15 . 03 . 2026

### செல்லையா சிவசுப்பிரமணியம்

(ஆசாரி கார்காற குஞ்சப்பா)

(முன்னைநாள் தலைவர்- நீர்வேலி வடக்கு காளி அம்பாள் தேவஸ்தானம்)

நிர்வேலி வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னக்குட்டி தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்ற கந்தையா - அம்மாக்குட்டி தம்பதியினரின் அன்பு மருமகனும், வசந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசதுரை, நாகம்மா, தெய்வானை, இரத்தினம், அன்னபூரணம், ஆறுமுகதாஸ் (மார்க்கண்டு), விஸ்வலிங்கம் மற்றும் சின்னத்தம்பி (சோமு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருபாகரன் (ஜேர்மனி), மாலதி, சுதாகரன், மைதிலி (ஆசிரியர்- கிளி / பூநகரி நல்லூர் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற துஸ்யந்தி மற்றும் வசந்தினி, சிவகுமார் (உரிமையாளர் - பிரசாந் மரக்காலை - நீர்வேலி), சுவேந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சிவஞானம் (லண்டன்), நேசமணி, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராசம்மாள் (பிரான்ஸ்), இராசாத்தி அம்மா, காலஞ்சென்றவர்களான கௌரி, அருமைநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், துகிர்தா - ஜெயந், பிரகலாதன், தமிழேந்தி, துளசிகா, பிரியங்கா (விபுலானந்தா கிழக்குப் பல்கலைக்கழகம்), பிரசாந், பிரதீக்கா - நதீஸ்வரன், சுவிர்தன், அக்ஷயா, கஸ்மிதா, திவானிகா ஆகியோரின் பேரனும், யஸ்மீராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.03.2026) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
குறுக்கு வீதி, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 9199 098
075 4701 784

(CS/31466) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 02 . 1944

இறப்பு 16 . 03 . 2026

### நடராசா சற்குணநாயகி

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சற்குணநாயகி அவர்கள் நேற்றுமுன்தினம் (16.03.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நடராசா (நடா ரெக்ஸ்ரைல்ஸ் - பஸ் நிலையம், அச்சுவேலி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, சிவசுப்பிரமணியம், செல்வராணி, சிவஞானேஸ்வரன் மற்றும் மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாஜினி, கிருபாஜினி, வாசவன் (லண்டன்), பஞ்சசீலன் (ஆசிரியர் யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), கௌரி, கவியரசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தராசா, கருணாநிதி (யாழ். போதனா வைத்தியசாலை), கங்கேஸ்வரி (லண்டன்), யாமினி, ஜெகதீஸ்வரன் (பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையம் - நெல்லியடி), துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுர்சிகா, விதுஷன், டனுசியா, நிகாஸ், அஸ்மிதா, சம்சிதன், அக்ஷயா, நிக்ஷன், விதுசிகன், நிஜோத்மன், அத்விஷா, திக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2026) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 007 0372, 077 507 8286

(CS/61013) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

18.03.2026
புதன்கிழமை


அன்பு தான் உன்
பலவீனம் என்றால்
இந்த உலகின் மிகச்
சிறந்த பலசாலி
நீதான்.

– அன்னைத் தெரசா

ஆதம்பாவா பாத்திமா சாஜிதா



# யாழ்ப்பாணத்தின் இதயத்துடிப்பை நெரிக்கும் பிளாஸ்ரிக் கழிவுகள்

யாழ்ப்பாணம் என்றதுமே நம் நினைவுக்கு வருவது தனித்துவமான குடாநாடும், அதன் தூய்மையான காற்றும், பண்பாட்டு விழுமியங்களும் தான். ஆனால், இன்று யாழ்ப்பாணத்தின் நகர்ப்பகுதி ஒரு கலாசார மையமாக இருப்பதற்குப் பதிலாக, மெல்ல மெல்ல 'பிளாஸ்ரிக் போத்தல்களின் குவிவு மையமாக' மாறிவருகின்றது.

யாழ்ப்பாணத்தின் பிரதான பேருந்து நிலையம், ஆஸ்பத்திரி வீதி மற்றும் சந்தைப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்தால், அங்குள்ள வடிகால்களிலும், நடைபாதைகளிலும் கைவிடப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் சிதறிக் கிடப்பதைக் காணலாம். குறிப்பாக, குடிநீர்ப் போத்தல்கள் மற்றும் குளிர்பானப் போத்தல்களின் ஆதிக்கம் மிக அதிகமாக உள்ளது. ஒரு காலத்தில் மண்பாண்டங்களிலும், கண்ணாடிப் போத்தல்களிலும் நீர் பருகிய சமூகம், இன்று 'வாங்கிப் பருகிவிட்டு எறிந்துவிடும்' கலாசாரத்திற்கு அடிமையாகிவிட்டதன் விளைவே இது.

## சூழலியல் பாதிப்புகள்: நிலமும் நீரும் ஆபத்தில்

யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீர்மட்டம் மிகவும் மென்மையானது. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் பிளாஸ்ரிக் போத்தல்கள் மழை நீரை நிலத்தடிக்குச் செல்லவிடாமல் தடுக்கின்றன. மேலும், இவை வடிகால்களில் அடைப்பை ஏற்படுத்தி, சிறு மழையிலேயே நகரின் பிரதான மற்றும் உள்ளக வீதிகள் வெள்ளத்தில் மூழ்கக் காரணமாகின்றன. நாங்கள் வீசும் ஒவ்வொரு பிளாஸ்ரிக் போத்தல்களும் சிதைவடைய சுமார் 450 ஆண்டுகளுக்கும் மேலாகும். இது நமது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் நச்சுப் பரிசு.

யாழ்ப்பாண மாநகரசபை கழிவு மேலாண்மையில் பல்வேறு முயற்சிகளை எடுத்த போதிலும், பொதுமக்களின் ஒத்துழைப்பின்மை ஒரு பெரும் சவாலாகவே உள்ளது. பொது இடங்களில் போதியளவு குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றை முறையாகப் பயன்படுத்தும் வழக்கம் இன்னும் பலரிடம் இல்லை.

நகரின் முக்கியமான இடங்களில் பிளாஸ்ரிக் போத்தல்களைச் சேகரிக்கும் விசேட இயந்திரங்களை நிறுவுதல் மூலமாக சூழலில் சேருகின்ற பிளாஸ்ரிக்கின் அளவைக் குறைக்கலாம்.

மேலும், திருவிழாக் காலங்களில் வீதிகளில் பக்தர்களுக்குக்காக ஆங்காங்கே நீர்முனைகள் வைப்பதைப் போல் பொது இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நீர்முனைகளை அமைப்பதன் மூலம் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீர் வாங்குவதைக் குறைத்துக் கொள்ளலாம்.

பொது இடங்களில் பிளாஸ்ரிக் கழிவுகளை வீசுபவர்களுக்கு உடனடி அபராதம் விதிக்கும் முறையைத் தீவிரப்படுத்துதலூடாகவும் பிளாஸ்ரிக் பாவனையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஒத்துழைக்கமுடியும்.

யாழ்ப்பாண நகரம் என்பது வெறும் கற்களாலும் கட்டடங்களாலும் ஆனது மட்டுமல்ல; அது எமது அடையாளம். அந்த அடையாளத்தை பிளாஸ்ரிக் குப்பைகளுக்குள் புதைத்துவிடக்கூடாது. அரச நிறுவனங்கள், தனியார் அமைப்புகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் கைகோர்த்தால் மட்டுமே யாழ்ப்பாணம் மீண்டும் ஒரு தூய்மையான நகரமாக மிளிர முடியும்.

இயற்கையைப் பாதுகாப்பது என்பது எமது கடமையல்ல; அது எமது உயிர்வாழ்தலுக்கான அவசியம்.

## விதி இதுவோ?

கருவறை உயிரைத் தந்து
வளர்க்கிறது!
வகுப்பறை அறிவைத் தந்து
ஆளாக்குகிறது!
கல்லறை ஆவியைப் பிரிந்த
உடலமதை
காப்பாற்றி வைக்கும்
கூடாரமாகிறது!

யாவும் இறைவனின்
விளையாட்டு
மனித வாழ்வு எங்கே
தொடங்கி
எப்படி முடிகிறது
என்பது தான் விதி!

தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்,
சிவபுரவளாகம்
ஏ9 வீதி முகமாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தை வென்றவன்

ஆனந்தன் லீலாகிருஷ்ணன்

**1966** ஆம் ஆண்டு வெளியான ஒஸ்கர் விருது வாங்கிய "A man for All seasons" திரைப்படத்தில் இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி தனது மனைவி மூலம் ஆண் வாரிசு கிடைக்காததால் தனது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு, வேறு ஒரு இளம்பெண்ணை திருமணம் செய்ய முற்படுவார் . போப் ஆண்டவர் மன்னரின் இந்த கோரிக்கையை மறுத்துவிட்டதால் கோபம் கொண்டு , ரோமிற்கும் இங்கிலாந்திற்கும் உள்ள உறவை முறித்துக்கொண்டு இங்கிலாந்தில் உள்ள தேவாலயத்தின் தலைவராக தன்னை அறிவித்தார். இந்த முடிவிற்கு உயர் அதிகாரியான சேர் தாமஸ் மோர் ஒருவரைத் தவிர அனைவரும் ஆதரவளிக்கின்றனர். அதையொட்டி மன்னருக்கும் அவரது நண்பருக்கும் ( சேர் தாமஸ் மோர் ) இடையிலான உரையாடலின் ஒரு பகுதி பின்வருமாறு:

மன்னர் ஹென்றி: "ஓ, தாமஸ் ! ஒரு மனிதன் தான் எங்கே பாவம் செய்தான் என்று சொல்ல ஒரு போப் தேவையா? ராணியை ஒதுக்கி வைப்பது எனது உரிமை , பீட்டர் வரை அனைத்து போப்களும் எனக்கும் என் உரிமைக்கும் இடையில் வரக்கூடாது! அனைவரும் ஆதரவு தெரிவிக்கும்போது நீங்கள் ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறீர்கள் ?

சர் தாமஸ்: "அப்படியானால் இந்த எளியவனின் ஆதரவு உங்களுக்கு எதற்கு தேவை?"

மன்னர்:ஹென்றி "நீங்கள் நேர்மையானவர்.. மேலும் கொண்ட கொள்கைக்காக , நீங்கள் எப்பொழுதும் உங்கள் நேர்மை தவறி நடக்க மாட்டீர்கள் ".

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.

நான் சிறுவயதிலிருந்து அண்ணாந்து பார்த்த இடதுசாரி ஆளுமைகளான ஹர்கிஷன் சிங் சுர்ஜித், ஜோதி பாசு, என்.சங்கரய்யா, நன்மாறன், போன்றோர் ஒருவர் பின்னே மறையும்பொழுதெல்லாம் அவர் இடத்தை நிரப்ப இன்னொருவர் இன்றும் இருக்கிறாரே என்று நினைப்பேன். அந்த இன்னொருவர் என்பது தமிழ்நாட்டில் இருக்கும் சிறுபிள்ளை கூட சொல்லிவிடும் . கட்சி சார்பற்று அனைவரும் அறிந்தவர். கடைசியாக கேரளத்து சிங்கம் வி.எஸ்.அச்சுதானந்தன் மறைந்த போது எனக்கிருந்த ஒரே ஒரு பிடிப்பு தோழர் நல்லக்கண்ணு மட்டுமே . அவரும் நம்மை விட்டு சென்று விட்டார் இந்த மாதம் பெப்ரவரி 26 அன்று காற்றில் கரைந்துவிட்டார். இனி நேர்மைக்கு உதாரணமாக யாரை சொல்லுவேன் ?உங்கள் நேர்மை இனி மேல் எங்கும் காண முடியாது . உங்கள் வெற்றிடத்தை யார் நிரப்ப முடியும் ? அவரைப் பற்றி நான் படித்தது .கேட்டது . பார்த்தது எல்லாம் என் நெஞ்சில் நீங்காமல் சுழன்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவரைப் பற்றிய ஒரு அஞ்சலிக் கட்டுரை எழுதுவதன் மூலமே இந்த துயரத்தை என்னால் தாண்டி செல்ல இயலும்.


திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் ( தற்பொழுது தூத்துக்குடி) டிசம்பர் 26, 1925 பிறந்த நல்லக்கண்ணுவிற்கு இளவயதிலேயே போராட்டத்தில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கும்பொழுதே ஹார்வி மில்ஸ் பஞ்சாலை தொழிலாளர்கள் போராட்டத்தினை இளவயதில் கண்டதே எனக்கு பின்னாளில் மக்களுக்காக போரிடும் வலிமையத் தந்தது என்று கூறியிருக்கிறார்.

"எங்கள் ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அரிசி சேகரிக்கப்பட்டு ,தூத்துக்குடியில் உள்ள வேலைநிறுத்தம் செய்பவர்களின் குடும்பங்களுக்கு பெட்டிகளில் அனுப்பப்படும். எங்களைப் போன்ற இளம் சிறுவர்கள்தான் அரிசி சேகரிக்கச் செல்வார்கள்." மக்கள் ஏழைகளாயிருப்பினும் ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது பங்களிப்பு செய்தனர். அப்போது எனக்கு 5 அல்லது 6 வயதுதான், தொழிலாளர்களின் போராட்டத்துடனான இந்த ஒற்றுமை எனக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. " என்று அந்த நினைவுகளை பின்னொரு நாளில் விவரித்திருந்தார் அவர்.

சுதந்திரப் போராட்டத்தின் போது ஆரம்பத்தில் காங்கிரஸால் ஈர்க்கப்பட்ட நல்லக்கண்ணு காங்கிரஸ் கட்சிக்காக 1937 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மஞ்சள் பெட்டிக்கு வாக்களிக்க வேண்டும் என்று வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்திருக்கிறார். அந்த காலத்தில் இரண்டே கட்சிகள் தான் போட்டியிட்டிருக்கின்றன. மஞ்சள் பெட்டி என்பது காங்கிரஸ் கட்சிக்கும் , பச்சை பெட்டி என்பது நீதிக் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. அப்பொழுது அவருக்கு வயது 12.மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் தேர்தலுக்கு அப்பாற்பட்ட அரசியல் பிரசாரங்களில் ஈடுபடத் தொடங்கினார். வேரூன்றிய சாதி மற்றும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளை அரசியல் சுதந்திரம் மட்டுமே அகற்றாது என்பதை அறிந்து கொண்டார் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் சுதேசி கொள்கைகளாலும், சுப்பிரமணிய பாரதியின் சமத்துவக் கண்ணோட்டத்தாலும், மார்க்சிய சிந்தனையை நோக்கி ஈர்க்கப்பட்டார். அவர் 15 வயதிலிருந்தே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் [CPI] இருந்த போதிலும் கட்சியின் முறையான உறுப்பினர் பதவிக்கு அவர் 18 வயது ஆகும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அதாவது மஞ்சள் பெட்டிக்கு வாக்கு சேகரித்த 12 வயது சிறுவன் பின்னாளில் அடுத்து வந்த 80 ஆண்டுகளுக்கு செங்கொடியின் புகழ்பாடினார் .

சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ் மேற்கொண்ட அனைத்து போராட்டங்களில் பங்கேற்ற போதிலும் அவர் குறிப்பிட்டுச் சொல்வது உப்பு சத்தியாகிரகப் போராட்டமும் ,வெள்ளையனே வெளியேறு போராட்டங்களையும் தான் .தூத்துக்குடியைச் சுற்றியிருந்த உப்பளங்கள் அனைத்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்தது .ஆதலால் அங்குள்ள தொழிலாளர்கள் சார்ந்த அனைத்து போராட்டங்களிலும் காவலர்களின் கெடுபிடி இருந்திருக்கிறது. காவலர்கள் இரவினில் ஊர்களில் முகாமிட்டு தங்கும் நாட்களில் சிறுவனான நல்லக்கண்ணு அவர்கள் மீது கற்களை வீசி விரட்டியடித்திருக்கிறார் பிறகு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் சேர்ந்து கொண்டு பள்ளிக்கு செல்லாமல் போராட்டங்கள் நடத்தியிருக்கிறார். பள்ளிக்கூடத்திற்கு செல்லாமல் போராட்டங்களுக்கு செல்வது அவரது தந்தை ராமசாமிக்கு பிடிக்கவில்லை. ஆறு குழந்தைகளுக்கு தந்தையான நல்லக்கண்ணுவின் தந்தை 45 ஏக்கர் நிலம் வைத்திருந்தார் . இவர் தொடர்ச்சியாக இப்படி போராட்டங்களுக்கு போவது பிடிக்காத அவரது தந்தை பள்ளிக் கட்டணம் செலுத்துவதை நிறுத்திவிடுவார். தந்தை எவ்வளவுக்கெவ்வளவு எதிர்த்தாரோ அவ்வளவுக்கவ்வளவு போராட்டங்களில் ஈடுபட்டு எப்படியோ பள்ளி படிப்பை முடித்த நல்லக்கண்ணு திருநெல்வேலியில் இருந்த மதுரைக்கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படித்திருக்கிறார் . அதன் பின்பு அவரால் படிக்க முடியவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த பிறகு நல்லக்கண்ணு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை,ஒருங்கிணைப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சகஜானந்த் சரஸ்வதி போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் எனும் அமைப்பிற்குள் பணியாற்றி, விவசாய தொழிலாளிகள் இடையிலான நிலப்பகிர்வு, குறைந்தபட்ச கூலி மற்றும் சுரண்டல் மிகுந்த நிலப்பிரபுத்துவ நடைமுறைகளை ஒழித்தல் போன்ற கோரிக்கைகளுக்காக கிராமப்புற ஏழை விவசாயிகளை ஒன்றுதிரட்டி பல்வேறு போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்.



"உழுபவனுக்கே நிலம் சொந்தம் " என்பதே இந்த அமைப்பின் கொள்கை . அவரது பணி விவசாயத் தொழிலாளர்களிடையே உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வை வலுப்படுத்தவும், சக்திவாய்ந்த நிலப்பிரபுத்துவ முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் உதவியது. இருப்பினும் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியை கண்டு பயந்த அரசு அடக்குமுறையைத் தூண்டியது. 1948 இல் கட்சி தடை செய்யப்பட்ட பிறகு, நல்லக்கண்ணு தலைமறைவானார். பிறகு நெல்லை சதி வழக்கில் 1949 இல் கைது செய்யப்பட்ட அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது , 1956 இல் விடுவிக்கப்படுவதற்கு முன்பு காவலில் பலமுறை சித்திரவதை செய்யப்பட்டார். இந்த ஏழு வருட சிறைவாசம் அவரது கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் மேலான பிடியை இன்னும் உறுதிப்படுத்தியது .

நல்லக்கண்ணு எப்படி தான் நம்பிய சித்தாந்தத்தில் உறுதியுடன் இருந்தாரோ .அதே அளவில் தனிப்பட்ட அளவில் மிகவும் மென்மையானவர் என்று அவருடன் பழகியவர்கள் குறிப்பிடுகின்றனர்.1995 ஆம் ஆண்டுகளில் தென் தமிழகத்தில் தொடர்ச்சியாக சாதிக்கலவரங்கள் நடந்தன. அப்பொழுது தூத்துக்குடியில் நடைபெற்ற கலவரத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். அதில் 84 வயதான நல்லக்கண்ணுவின் மாமனாரும் ஒருவர். தாங்கவொணா துக்கமும் ,ஆத்திரமும் நிறைந்திருக்கும் அந்த நேரத்தில் தனது மாமனாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்கு முன்பு கலவரத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அமைதிப் பேரணியில் கலந்துகொண்டிருக்கிறார். நெஞ்சில் சிறிதும் கசப்பும் இல்லாத அறம் காக்கும் ஒருவரால் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும் அல்லவா . எப்படிப்பட்ட தலைவர்கள் நம் நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர். நாம் என்றைக்காவது அவருக்குண்டான நியாயமான பதவியோ , அதிகாரமோ வழங்கியிருக்கிறோமோ . இல்லை என்பது தான் நிதர்சனம் தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக 13 ஆண்டுகள் பணியாற்றிய அவரால் 1999 கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதி உட்பட தேர்தல்களில் போட்டியிட்ட போதிலும் ஒருபோதும் எந்த தேர்தலிலும் வெற்றி பெறமுடியவில்லை. அதுவும் கோவை குண்டுவெடிப்புக்குப் பின்னர் நடந்த தேர்தலில் , முஸ்லீம் மக்களை கூட்டிக்கொண்டு வாக்கு சேகரிக்க வேண்டாம் என்று கூட்டணியினர் எச்சரித்த போதிலும் ,எது தனக்கு சரியென்று படுகிறதோ அதனை மட்டும் நேர்மையாகச் செய்ததால் தன்னை எதிர்த்து நின்ற பாரதிய ஜனதா வேட்பாளரிடம் தோற்றுப்போனார் .

1980ஆம் ஆண்டுகளில் போஃபர்ஸ் ஊழல் இழைத்த ஆளும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை பாதயாத்திரை மேற்கொண்டார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம்: அதிகாரமல்ல, உன்னத ஆளுமை!



■ மு. விக்னேஸ்வரன்
(ஓய்வுநிலை அதிபர்)
தலைவர், அரச சேவைகள்
ஓய்வூதியம் நம்பிக்கை நிதியம்
வலி.கிழக்கு கோப்பாய்

ஒரு செயலின் வெற்றி என்பது அந்தச் செயலைச் செய்பவர்களை விட, அதனை வழிநடத்தும் 'தலைமைத்துவத்தின்' கையில்தான் தங்கியிருக்கிறது. குடும்பம் தொடங்கி கிராமம், பிரதேசம், தேசியம் என ஒவ்வொரு தளத்தின் சிறப்புக்கும் அதன் தலைமைத்துவமே அச்சாணியாக அமைகிறது. 'ஒரு தலைவனின் நடத்தை, அவனது சக உறுப்பினர்களின் நடத்தையில் எப்போது மாற்றத்தை ஏற்படுத்துகிறதோ, அதுவே மிகச்சிறந்த தலைமைத்துவம்' எனலாம்.

**ஒரு தலைவன் என்பவன் யார்?**

வெறுமனே கட்டளையிடுபவன் தலைவன் அல்ல; மாறாகப் பின்வரும் பண்புகளைத் தனது ஆளுமையில் மெருகூட்டியிருப்பவனே உண்மையான தலைவன்:

- அனைவரையும் சமமாகப் பாவித்தல்.
- எதிர்காலச் சவால்களை முன்கூட்டியே கணித்தல்.
- மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் பண்பு.
- கிடைத்த அதிகாரத்தைத் தனது சுய நலத்திற்குப் பயன்படுத்தாமை.
- "செய்" என்று சொல்லாமல், "செய்வோம்" என்று முன்னின்று உழைத்தல்.

அமெரிக்காவின் ஓக்கியோ பல்கலைக் கழக ஆய்வின்படி, பிறர் நலன் சார்ந்த சிந்தனை, குழுவை ஒருங்கிணைக்கும் ஆற்றல், இலக்கை நோக்கிய வேகம் மற்றும் சமூக நுண்ணறிவு ஆகிய நான்கு தூண்களே ஒரு தலைமைத்துவத்தைத் தாங்கி நிற்கின்றன.

**சமகாலச் சவால்களும் பொது அமைப்புகளும்**

இன்று நமது கிராமங்களில் இயங்கும் சனசமூக நிலையங்கள், ஆலயச் சபைகள், மாதர் மற்றும் முதியோர் சங்கங்கள், விளையாட்டுப்போட்டிகள் ஆகியவற்றில் தலைமைத்துவத் தெரிவு என்பது பெரும் சவாலாகவே உள்ளது.

பழைய தலைவர்கள் புதியவர்களுக்கு வழிவிட மறுப்பது.

"நான் சொல்வதே சட்டம்" என்ற பிடிவாதம்.


உறுப்பினர்களிடையே நிலவும் ஈகோ மற்றும் புரிதலின்மை.

இவை அமைப்புகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன.

**தலைமைத்துவத்தின் வகைகள்**

தலைவர்கள் பிறக்கிறார்களா அல்லது உருவாக்கப்படுகிறார்களா என்ற விவாதம் ஒருபுறம் இருந்தாலும், வாய்ப்புகள் வழங்கப்படும் போதே தலைமைத்துவப் பண்புகள் முதிர்ச்சியடைகின்றன. உலகில் பலதரப்பட்ட தலைவர்கள் உண்டு:

**நிர்வாகத் தலைவர்கள்:** கட்டமைப்பை வழிநடத்துபவர்கள்.



**கொள்கை வகுப்பாளர்கள்:** தொலை நோக்குத் திட்டங்களைத் தீட்டுபவர்கள்.

**துறைசார் நிபுணர்கள்:** குறிப்பிட்ட துறையில் ஆளுமை கொண்டவர்கள்.

**கவர்ச்சித் தலைவர்கள்:** தங்களது சொல்லால், செயலால் ஈர்ப்பவர்கள்.

**வெற்றித் தலைவனின் ரகசியம்**

பதவிகள் ஒருவரைத் தலைவனாக்கலாம், ஆனால் மக்களின் மதிப்பே ஒருவரைத் தலைவனாகத் தக்கவைக்கும். ஒரு தலைவனிடம் அர்ப்பணிப்பு, விசுவாசம், நேர்மை மற்றும் மனிதாபிமானம் ஆகிய ஆளுமைப் பண்புகள் இருக்க வேண்டும். உண்மையான தலைவன் தனக்குக் கீழ் பல தலைவர்களை உருவாக்குவான். அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து, குழுவின் ஒவ்வொரு உறுப்பினரையும் மதித்து, பொறுப்புகளை வழங்குவதே தலைமைத்துவத்தின் விசேட பண்பாகும். கட்டளையிடுவதைத் தவிர்த்து, வேண்டுகோள் விடுப்பவராகத் தலைவன் மாறும்போது அங்கே அதிகாரம் என்பது கவர்ச்சிகரமான ஒன்றாக மாறுகிறது.


**நிறைவான தலைமைத்துவத்தை நோக்கி...!**

நலிவான சிந்தனைகள் தோல்விக்கே வித்திடும். தலைமைத்துவம் தழைத்தோங்க ஆக்கபூர்வமான சிந்தனைகள் அவசியம். கற்பனைத் திறனும், புதியனவற்றைப் படைக்கும் ஆர்வமும் ஒரு தலைவனுக்குத் துணையாக இருக்க வேண்டும். ஒரு செயலை உயர்த்திப் பேசுவது மட்டும் தலைமைத்துவம் அல்ல; நாம் பேசும்போது மற்றவர்களின் குரலுக்கும் செவிசாய்த்து, அவர்களையும் அரவணைத்துச் செல்வதே முன்னுதாரணமான தலைமைத்துவமாகும்.

# காலத்தை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)


தனது 95 வயதிலும் தளராமல் தாமிரபரணி ஆற்றில் சட்டவிரோத மணல் அள்ளுவதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தனிப்பட்ட முறையில் வாதிட்டார். அவரது தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களால் கண்மூடித்தனமாக கனிம வளங்களை சுரண்டும் சுரங்கத் தொழிலுக்கு நீதித்துறை தடை விதித்தது. அரசியல் என்றாலே நாம் அறிந்ததெல்லாம் ஆடம்பரமும், அதிகாரமும். அவருடன் அரசியலுக்கு வந்தவர்கள் மாட மாளிகைகளிலும், தங்களுக்கு பிறகே வரும் 10-15 தலைமுறைகளுக்கு சொத்துகளைக் குவித்தபோதிலும் நல்லக்கண்ணு மிக எளிமையாகவே வாழ்ந்தார். அவர் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு சாதாரண வீட்டிலேயே தனது இறுதிக் காலம் வரை வாழ்ந்திருக்கிறார் . கட்சி வழங்கும் உதவித்தொகை மற்றும் அவரது மனைவியின் ஓய்வூதியம் ஆகியவற்றைக் கொண்டு தனது அடிப்படைத் தேவைகளை கடைசிவரை பார்த்துக்கொண்டார். தனக்கு வழங்கப்பட்ட விருதுகளின் மூலம் கிடைத்த அனைத்துப் பணத்தையும் கட்சிக்கே திரும்பி வழங்கிய மகான். இனி மேல் இவரைப்போல் யார் இருக்கிறார் என்று நம்மை எல்லோரையும் ஏங்க வைத்தவர் நம்மை விட்டுப் போய்விட்டார். நான் நம்பிய நேர்மைக்கு வயது 102. குருதிப்புனல் படத்தில் கமிஷனர் ஆதி எனும் கதாபாத்திரத்தில் நடித்த கமல் பேசும் ஒரு வசனம் உண்டு, "நான் கடவுளைக் கூட கும்பிடலை. நேர்மையை மட்டும் தான் நம்பினேன்". என்று சொல்வார். அதுபோன்று தனது இறுதி நொடி வரை நேர்மையை மட்டுமே நம்பிய நல்லக்கண்ணு காலத்தை வென்றவர் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் எப்படி கக்கன் அவரது நேர்மைக்காக கொண்டாடப்படுகிறாரோ, நேர்மை என்ற சொல் இருக்கும்வரைக்கும் நல்லக்கண்ணுவும் இருப்பார்.




"நான் கடவுளைக் கூட கும்பிடலை. நேர்மையை மட்டும்தான் நம்பினேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிக்கு முற்றுப்புள்ளி:








# யாழ்ப்பாண மண்ணில் 'கலப்பின மிளகாய்' விதைப்புரட்சி!

வை. ஞானபாஸ்கரன்,
பண்ணை முகாமையாளர்,
மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் சமையலறைகளில் மிளகாய்க்கு எப்போதுமே ஒரு தனி மகுடம் உண்டு. கடந்த இரு தசாப்தங்களாக நமது விவசாயிகள் வெளிநாட்டுக் கலப்பின மிளகாய்களையே நம்பியிருந்தனர். அதிக விளைச்சல், கண்ணைப் பறிக்கும் தோற்றம் என அவை ஆசை காட்டினாலும், நமது நாட்டுச் சூழல், நோய் மற்றும் பீடைகளுக்கு அவை எளிதில் மண்டியிட்டு விடுகின்றன.

இந்தச் சவாலை முறியடிக்க, மஹா இலுப்பள்ளம வயற்பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் பத்தாண்டு கால உழைப்பிற்குப் பின், நம் மண்ணுக்கேற்ற 'வீரியமான' உள்ளூர் கலப்பின மிளகாயை உருவாக்கியுள்ளது. தற்போது, யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் (திருநெல்வேலி) இந்த விதை உற்பத்தியில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.



### ஏன் இந்தக் கலப்பின மிளகாய்?

- எல்லாச் செடிகளும் ஒரே உயரத்தில் வளர்வதுடன், காய்கள் அனைத்தும் ஒரே வடிவம், நீளம் மற்றும் நிறத்தில் இருக்கும்.
- உள்ளூர் நோய்கள் மற்றும் பீடைகளைத் தாங்கி வளரும் வல்லமை கொண்டது.
- திடீர் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன் இதற்குண்டு.
- 'MICH Hy1' எனும் உள்ளூர் நாயகன்

இந்தக் கலப்பின மிளகாயின் பிறப்பு சுவாரஸ்யமானது. 'கல்கிரியாகம தெரிவு' (தாய்) மற்றும் 'எம்.ஐ. வரணியா' (தந்தை) ஆகிய இரு வர்க்கங்களை இணைத்து உருவாக்கப்பட்டதே இந்த MICH Hy1.

தாய் (Galkiriyagama Selection): நிமிர்ந்து வளரும் தன்மை கொண்டது. பிரகாசமான பச்சை நிறம் மற்றும் அதிக காரத்திற்குப் பெயர் பெற்றது. ஒரு ஹெக்டேயருக்கு 3 மெற்றிக்தொன் உலர்ந்த மிளகாயைத் தரவல்லது.

தந்தை (M.I. Waraniya): நமது பாரம்பரிய வரணியா மிளகாயிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. இலைச் சுருள் நோய்க்கு எதிரான பலமான எதிர்ப்புச் சக்தியைக் கொண்டது.

இந்த இருவரின் சங்கமத்தில் உருவான MICH Hy1, நடுகை செய்த 8 மாதங்களிலேயே ஒரு ஹெக்டேயருக்கு 25 மெற்றிக்தொன் பச்சை மிளகாயைத் தருகிறது. உலர்ந்த மிளகாய் உற்பத்தியில் இது ஒரு 'கேம் சேஞ்சர்' (Game Changer) எனலாம்.

### பாதுகாப்பான கட்டமைப்பில் விதை உற்பத்தி: ஒரு நுட்பமான கலை

கலப்பின விதை உற்பத்தி என்பது ஒரு தவம் போன்றது. இதனைப் பாதுகாப்பு வலைக் குடில்களுக்குள் (Insect Proof Net Houses) மேற்கொள்வது அவசியம்.

**1. நாற்றுமேடை முதல் நடுகை வரை:**
ஊடகம்: மேல்மண், மணல், கூட்டெரு கலந்த ஊடகத்தை [illegible] தொற்றுநீக்கம் செய்து [illegible] நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன.

தந்தைத் தாவரம் பூப்பதற்கு இரண்டு வாரங்கள் கூடுதல் காலம் எடுக்கும். எனவே, தந்தை விதைகளை இரண்டு வாரங்களுக்கு முன்னரே விதைக்க வேண்டும்.

4 தாய் தாவரங்களுக்கு ஒரு தந்தை தாவரம் என்ற விகிதத்தில் பாதுகாப்பு கட்டமைப்பில் நடுகை செய்யப்படுகின்றன.

**2. செயற்கை மகரந்தச்சேர்க்கை (Hand Pollination):**
இதுதான் இந்தச் செயற்பாட்டின் இதயம்.

தந்தைத் தாவரத்தின் பூக்களிலிருந்து சேகரிக்கப்படும் மகரந்தத்தை உலர்த்தி, பாதுகாத்து வைக்கின்றனர்.

தாய்த் தாவரத்தின் பூக்கள் விரியும் முன்னரே, அதில் உள்ள ஆண் பகுதிகளை அகற்றிவிட்டு (Emasculation), சேகரித்து வைத்துள்ள தந்தை மகரந்தத்தை அதன் பெண் பகுதியில் பூசுகின்றனர்.

இப்படி உருவான காய்கள் மட்டுமே உண்மையான 'கலப்பின விதைகளைக் கொண்டிருக்கும்.

**3. அறுவடை மற்றும் வித்துப் பிரித்தெடுப்பு:**
மகரந்தச்சேர்க்கை முடிந்த ஒன்றரை மாதத்தில் செக்கச் சிவப்பாகப் பழுத்த மிளகாய்கள் அறுவடை செய்யப்படுகின்றன. ஒரு மிளகாயிலிருந்து சுமார் 50 தரமான வித்துக்கள் கிடைக்கின்றன. இவை 9% க்கும் குறைவான ஈரப்பதத்தில் உலர்த்தப்பட்டு, விதை அத்தாட்சிப்படுத்தும் அலுவலகத்தின் கடுமையான பரிசோதனைக்குப் பின் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தின் செத்தல் மிளகாய் தேவை 1785 மெற்றிக்தொன்னாக இருக்கையில், தற்போது அதில் ஒரு சிறு பகுதியே உற்பத்தியாகின்றது. இறக்குமதியைக் குறைத்து, அன்னியச் செலாவணியைச் சேமிக்க இந்த உள்ளூர் கலப்பினச் செய்கை ஒரு வரப்பிரசாதமாகும்.

விவசாயிகளே, அதிக பீடைநாசினிகள் இன்றி, அதிக இலாபம் தரும் இந்த உள்ளூர்க் கலப்பின மிளகாய் செய்கைக்கு மாறுவோம்! பசுமைப் புரட்சியை நம் மண்ணில் தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மெய்வன்மை

யாழ். மார்ச் 18

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியும், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் நாளை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம.தரணீதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெங்காதரன் இந்திர மோகன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் சிவபாதசுந்தரம் வசீகரன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி வனஜா பவானந்த சர்மா, பழைய மாணவி திருமதி விதுஷா கோபிநாத் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (ம)

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 25 வருடங்கள் குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி இன்று 18.03.2026 புதன்கிழமை ஓய்வுபெறும்

திருமதி
**கலைவாணி அருளானந்தம்**

அவர்களின் ஓய்வு காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர்:
**குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள்**
(தனு, வஜனி, மனோ, கார்த்தி, யசி, ஊர்மி, அனற், ஜெனற்)

## உதவி நிதியாளர் தேவை

சைவ சமைய விழுமியங்களை மையக்கருவாக கடைப்பிடித்து செயல்படும் சைவபரிபாலன சபைக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகுதியான முழு நேர உத்தியோகத்தரை நியமிக்க உள்ளோம். மேற்படி பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது விண்ணப்பிக்க ஆர்வமுடையவர்கள் முழுமையான விபரங்களை கொண்ட சுயவிபரக்கோவையை **"தலைவர், சைவபரிபாலன சபை, இல. 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 30.03.2026 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

(CS/61011) J-1 **தலைவர்**

## யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
## பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம் :- 04.04.2026 சனிக்கிழமை**
**நேரம் :- பிற்பகல் 3.30 மணி**
**இடம் :- பாடசாலைப் பிரதான மண்டபம்**

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள்)

**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

(CS/61015) J-1

## காரைநகர் பிரதேசசபை
## தெற்கு உப அலுவலகம்
## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

காரைநகர் பிரதேசசபையின் தெற்கு உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-07, கொட்டைப்புலம் வீதியிலுள்ள 34/3 என்னும் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதன பதிவேட்டில் சொந்தக்காரர் உரிமை கோருபவர் கந்தையா சிவபாலன் என காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை கந்தையா சிவபாலன் அவர்கள் தனது காலஞ்சென்ற தாயாருக்கு அவரின் தந்தை தம்பர் கணபதிப்பிள்ளை சீதனமாக கொடுத்தார் என்றும் தனது தாயாராகிய கந்தையா கைம்பெண் பொன்னம்மா அதனை ஆண்டு அனுபவித்த பின் எனக்கு நன்கொடையாக எழுதித்தந்தார். நான் அவ்ஆதனத்தை கடந்த 38 வருடங்களாக ஆண்டு அனுபவித்து வருகின்றேன் என்றும் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக குறித்த உறுதி தொலைந்து விட்டது. குறித்த நன்கொடை உறுதியை எழுதித்தந்த நொத்தாரிசு பெயரும் தெரியவில்லை எனக்கு தற்போது ஒரு உறுதி சாதனம் தேவையாக உள்ளதால் இவ் ஆதனத்தினை எனது சொந்த நன்கொடை ஆதனமாக வெளிப்படுத்தி இவ் உறுதி சாதனத்தினை நிறைவேற்றுவதாக பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 25.04.2015 ஆம் திகதி 5982 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் சாதனம் ஒன்று நிறைவேற்றியிருந்தார். அதன் பின்னர் கந்தையா சிவபாலன் 24.01.2017ஆம் திகதிய 802 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஜெகநாதன் ஜனாரத் அவர்களுக்கு வழங்கியிருந்தார்.

தம்பையா சிவரூபன் அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு செ.கிறிஸ்ரபெலினா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 27.01.2019 ஆம் திகதிய 65 ஆம் இலக்க உறுதி மூலம் ஜெகநாதன் ஜனாரத் அவர்களால் வழங்கப்பட்டு குறித்த ஆதனத்திற்கு சொந்தமும் உரித்தும் உடையவராகின்றார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை "சாந்தை" ஆட்சிப்படி நில.பர.6 ஆறும் இதில் மேற்குப் பக்கமாக நில.பர.3 பனைகளும் இதன் எல்லைகள்.

வடக்கு - 4 அடி பாதை
கிழக்கு - மார்கண்டு நர்த்தனன் பெண் பிரேமலாவின் ஆதனம்
தெற்கு - சின்னக்குட்டி இளந்தரசிங்கத்தின் ஆதனம்
மேற்கு - சின்னக்குட்டி இளந்தரசிங்கத்தின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தினை தம்பையா சிவரூபன் என்னும் பெயரில் ஆதன பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தம்பையா சிவரூபன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் காரைநகர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
பிரதேச சபை,
காரைநகர்..

# அமெரிக்க இராணுவத்தினர் 13 பேர் இதுவரை உயிரிழப்பு

*நியூயோர்க், மார்ச் 18*

*மத்திய கிழக்கில் ஈரான் நடத்திய தாக்குதலில், இதுவரை அமெரிக்க இராணுவத்தினர் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 200 பேர் காயம் அடைந்துள்ளனர் என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.*

*ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் இணைந்து கடந்த 28ஆம் திகதி தாக்குதலைத் தொடங்கின. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ஈரான், மேற்காசிய நாடுகளில் உள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்களை இலக்குவைத்து தாக்கி வருகின்றது. ஈரானில் 200 பெண்கள், 200 குழந்தைகள் உட்பட 1,200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர். அதேவேளை, இஸ்ரேலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதேநேரத்தில், லெபனானில் 886 பேர் இறந்துள்ளனர். நடந்துவரும் மோதலில் லெபனானிலும் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ஏ-இ)*

## மணமகள் தேவை

**யாழ் கத்தோலிக்கம் (V) 31 வயதுடைய வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.**

தொடர்புகளுக்கு:-
**077 899 3671**

(CS/60978) J-1

## பெயர்மாற்றம்

**தெளிகரை, பூநகரியில் வசிக்கும் சின்னத்தம்பி கந்தையா ஆகிய நான் எனது பெயரை சின்னத்தம்பி கந்தசாமி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சின்னத்தம்பி கந்தசாமி என்றே கையொப்பமிடுவேன்.**

**சின்னத்தம்பி கந்தசாமி**

(CS/61003) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை வெளிப்படுத்தவுள்ள கம்மன்பில!




அரசாங்கம் வெளிப்படுத்தாத உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் உண்மையான பிரதான சூத்திர தாரி யார் என்பது தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதி நாட்டுக்கு வெளிப்படுத்துவேன் என்று பிவிதுரு ஹெல உறுமயக் கட்சி யின் தலைவர் உதய கம்மன்பில தெரி வித்துள்ளார். கொழும்பில் அண்மையில் நடத்திய ஊடக சந் திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுமார் ஒன்றரை வருட காலம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் 'உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் சூத்திரதாரியைத் தேடி' எனும் ஆய்வு நூலை உருவாக்கியுள்ளேன். அதை எதிர் வரும் 31ஆம் திகதி மாலை 3:30 மணிக்கு வெளியிட எதிர் பார்க்கின்றேன். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் கடந்த 7 வரு டங்களாக விற்பனை செய்யப்பட்டது. அதை வைத்து அரசாங் கங்கள் அமைக்கப்பட்டன, கலைக்கப்பட்டன. எந்தவொரு அடிப் டையும் இன்றி இராணுவத்தினரை துன்புறுத்த இந்தத் தாக்கு தல் பயன்படுத்தப்பட்டது. இப்போது இந்த மோசடிக்கு முற்றுப் புள்ளி வைப் பதற்கான காலம் வந்துவிட்டது - என்றார். (எ-இ)

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை மாலை பிரதோஷ விரத உற்சவம் பக்திபூர்வ மாக இடம்பெற்றது. இதன்போது நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் அடியவர்கள் புடைசூழ இட ப வாகனத்தில் உள்வீதியில் பவனி வந்தார். (ச-66)



# மாதிரிக் கிராமங்களின் அங்குரார்ப்பண நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 18

தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற வளமான கிராமம் சமூக உற்பத்தித்திறனுக்கான மாதி ரிக் கிராமங்களின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடுபூரா கவும் நடைபெற்றது. இந்தநிலையில் கிளி நொச்சி மாவட்டத்திற்கான நிகழ்வு கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் மலையாளபு ரம் கிராமத்தில் மலையாளபுரம் கிராம அலு வலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. கரைச்சிப் பிரதேச செயலா ளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், கரைச்சிப் பிர தேச செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் பி.ராஜ்வினோத், தேசிய உற்பத்தித் திறன் செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவை யாளர், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (41-113)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் இராசம்மா**
எமது கல்லூரி ஆசிரியை
**நிசாந்தி தனேந்திரன்**
அவர்களின் அன்புத் தாயாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

தோற்றம் 19.09.1942 மறைவு 15.03.2026


# ஹோர்மூஸில் பயணிக்க ஈரானுக்கு அனுமதியாம்

## *அமெரிக்கத் திறைசேரி செயலாளர் தெரிவிப்பு*

நியூயோர்க், மார்ச் 18

உலகளாவிய எண்ணெய் விநியோகத் தில் சமநிலையைப் பேணுவதற்காக, ஈரான் நாட்டு எண்ணெய் தாங்கிக் கப்பல் கள் ஹோர்மூஸ் நீரிணை ஊடாகப் பய ணிப்பதற்கு அமெரிக்கா அனுமதி வழங் கியுள்ளது என்று அமெரிக்கத் திறைசேரி செயலாளர் ஸ்கொட் பெசன்ட் தெரிவித் துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காண லிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். "ஈரானிய கப்பல்கள் ஏற்கனவே வெளியேறத் தொடங்கியுள்ளன. உல கின் ஏனைய பகுதிகளுக்கான விநி யோகத்தை உறுதிப்படுத்துவதற்காகவே இதை நாம் அனுமதித்துள்ளோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுக ளின் கப்பல்கள் தற்போது அதிகளவில் இந்த நீரிணையை கடப்பதாகவும், இனி வரும் காலங்களில் போக்குவரத்து மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஈரானின் இராணுவ வல் லமையைக் குறைப்பதே அமெரிக்கா வின் முதன்மை இலக்கு என்பதை ஜனா திபதி ட்ரம்ப் தெளிவுபடுத்தியுள்ளார் என பெசன்ட் சுட்டிக்காட்டினார். ஈரானின் கடற்படை பலம் மற்றும் அதன் எல்லை களுக்கு அப்பால் ஆதிக்கம் செலுத்தும் திறனை முற்றாக சிதைப்பதே வொஷிங் டனின் நோக்கம் என்றும் அவர் கூறியுள் ளார். (எ-இ)


## முதலாம் ஆண்டு சிரார்த்த தின ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம் 29 07 1954 மறைவு 30 03 2025



கடந்த வருடம் (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புச் சகோதரர்
**அமரர் வேலாயுதபிள்ளை குசேந்திரன்**
அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின ஆத்மசாந்தி பிரார்த்தனை நாளை (19.03.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர்கள்
இல.86, அரசடி வீதி, லவணேஸ்வரன் குடும்பத்தினர்
யாழ்ப்பாணம். [illegible]
077 432 [illegible] [illegible] 077 049 2480

(CS/60973) J-1



## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 25.09.1954 இறப்பு 15.03.2026

திருமதி
**ரவீந்திரமலர் அற்புதரமணி**
அவர்களின்
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்களது பிரிவால் துயருறும்
**உறவினர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைமறுதினம் வரை

## வடமாகாணத்தில் இடியுடன் மழை!

யாழ்ப்பாணம், மார்ச் 18

வெப்பச்சலனச் செயற்பாடு மற்றும் கிழக்குத் திசைக் காற்றுமுறிவின் காரணமாக வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 20ஆம் திகதிவரை மழை தொடரும் இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இது வெப்பச்சலன செயற்பாட்டால் கிடைக்கும் மழை என்பதனால் இடியுடன் கூடிய மழையாகவே அமையும். ஆகவே, இடி, மின்னல்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக விருப்பது அவசியம் - என்றுள்ளது. (அ-ம-66)

## கஞ்சா கலந்த மாவா இரண்டு பேர் கைது!

ஆவரங்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆவரங்கால் தெற்குப் பகுதியில், கஞ்சா கலந்த மாவாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கஞ்சா கலந்த மாவாவை உடமையில் வைத்திருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய அச்சுவேலி தெற்குப் பகுதியில் நேற்று சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பிறிதொருவரே அதைத் தனக்கு வழங்கியதாகக் கூறியுள்ளார். இதையடுத்து, அந்த நபரை பொலிஸார் கைது செய்தபோது, அவருடைய உடமையிலும் மாவா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறிவிடப்பட்டது. (அ-ம-23)

அத்துமீறிய மீன்பிடி

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

கிளிநொச்சி, மார்ச் 18

இரணைதீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் இருவரையும், எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் கடந்த 12ஆம் திகதி அதிகாலை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.



இதன்போதே, அவர்களுக்கு எதிரான விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-55)

### வங்கிச்...

கிழமைகளில் இனி செயற்பாடுகளை மட்டுப்படுத்தவுள்ளன.

இன்றுமுதல் இனி ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை மட்டுமே வங்கிச் செயற்பாடு நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### இன்னும்...

ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியளவில் தீர்ந்துவிடும். தற்போது கப்பல்களில் எரிபொருள்கள் வந்துள்ளன என்று கூறப்படுகின்றபோதிலும், அவற்றில் பெரும்பாலும் பெற்றோலே உள்ளது. மின்சார உற்பத்திக்கு டீசலே பயன்படுகிறது என்பதால், மின்தடையை எதிர்நோக்கும் நிலையில் நாடு உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

நுரைச்சோலையில் தரமற்ற நிலக்கரி காரணமாக 150 மெகாவாட் மின்சாரம் குறைவடைந்துள்ளது. மின்சார உற்பத்தியில் முதலில் செலவு குறைந்த நீர் மின்சாரம், சூரிய சக்தி, காற்று மற்றும் உயிரியல் எரிபொருள் ஆகியவற்றையே பயன்படுத்த வேண்டும். அதன் பின்னரே நிலக்கரிக்கும், அதுவும் போதாவிடின் ஏனைய எரிபொருள்களுக்கும் செல்ல வேண்டும். கடைசியாகவே டீசலுக்குச் செல்ல வேண்டும்.

நுரைச்சோலையில் இருந்து கிடைக்க வேண்டிய 810 மெகாவாட் மின்சாரம் முழுமையாகக் கிடைத்திருந்தால், இன்று மின்சார உற்பத்திக்கு ஒரு லீற்றர் டீசல் கூட தேவைப்பட்டிருக்காது. இழக்கப்பட்டுள்ள 150 மெகாவாட் மின்சாரத்தை ஈடுகட்ட வாரத்துக்கு 35 இலட்சம் லீற்றர் டீசலும், மாதத்துக்கு 140 லட்சம் லீற்றர் டீசலும் தேவைப்படுகின்றன - என்றார். (அ-ம)

### மின்வெட்டுக்கு...

தீர்மானத்தையும் எடுக்க முடியாது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய நிலைமையின் அடிப்படையில் மின்வெட்டுக்கு உடனடி அவசியம் எதுவும் எழவில்லை. இந்தப் போரின் எல்லைகளை நீங்களோ, நானோ அல்லது வேறு எவருமோ தீர்மானிக்க முடியாது. போரின் எல்லைகள் எந்த அளவுக்கு விரிவடையும் என்பதைப் பொறுத்தே எதிர்கால முடிவுகள் அமையும் - என்றார். (அ-ம)

### பல்கலைக்கழக...

தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் உள்ளிட்ட மூன்று மாணவர்களே இவ்வாறு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஊடாகவே விசாரணைக்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடியைக் கீழிறக்கி கறுப்புக் கொடியை ஏற்றிய விவகாரத்தில் துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்டோரிடமும் அண்மையில் விசாரணைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

### ஒவ்வொரு...

வாரத்தில் பாதீனிய ஒழிப்பு வாரத்தைக் கடைப்பிடிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அழிக்க முடியாத பெரும் களையாக உருவெடுத்து வரும் பாதீனியத்தை ஒழிப்பது தொடர்பான செயற்றிட்டம் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தலைமையில், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே, பாதீனியத்தை ஒழிப்பது தொடர்பில் விசேட பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அத்துடன், பாதீனிய ஒழிப்புத் தொடர்பில் கடந்த ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கருத்திற் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சா.சுதர்சன், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட கடற்படைக் கட்டளைத் தளபதி எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-66)

### யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணத்தில் உள்ள அனேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில நாள்களாக மண்ணெண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடான சூழல் நிலவிய நிலையில், தற்போது படிப்படியாக மண்ணெண்ணெய் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணத்தில் உள்ள அனேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றுள்ளது. (அ-ம-17)

### எரிபொருள்...

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில், நேற்று இரவு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுர மேலும் கூறியதாவது:-

எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் உச்சக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சில எரிபொருள் வழங்குநர்கள், கப்பல்களை அனுப்புவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். எனினும், நட்பு நாடுகளுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில், எமக்கு உதவுவது தொடர்பில் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன. அத்துடன், எரிபொருள் வழங்கக்கூடிய நிலையில் உள்ள விநியோகஸ்தர்களுக்கு கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பப்பட்டுள்ளன.

டொலரில் வருமானம் ஈட்டும் தனியார் ஏற்றுமதித் தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறை சங்கங்களின் கோரிக்கைக்கு அமைய, அவர்கள் தமக்குத் தேவையான எரிபொருளை தாமே இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. நாளைமுதல் இந்தச் செயன்முறை பின்பற்றப்படும்.

நாட்டில் எரிவாயுவுக்கு எந்தத் தட்டுப்பாடும் ஏற்படாது. மார்ச் மாதத்துக்கு 3 லட்சத்து 30 ஆயிரம் தொன் எரிவாயுவே தேவை என்ற நிலையில், 3 லட்சத்து 80 ஆயிரம் தொன் எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 33 ஆயிரம் எரிவாயுவுடன் கப்பலொன்று இரு தினங்களுக்குள் வருவது உறுதியாகியுள்ளது.

சுகாதார சேவை, விமான நிலையம் மற்றும் துறைமுகம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காகப் பாதுகாப்பு எரிபொருள் இருப்புகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பெருந்தோட்டத் துறையில் தேயிலைத் தோட்டப் பயன்பாடுகளுக்கு கியூ.ஆர். முறைமையின் கீழ் வழங்கப்படும் ஒதுக்கீடு போதாதெனில், அவர்களுக்கு மேலதிக எரிபொருள் வழங்கப்படும். உணவு விநியோக வலையமைப்பு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, அத்தியாவசிய உணவு மற்றும் மரக்கறி விநியோகஸ்தர்களுக்கான எரிபொருள் விநியோகமும் உறுதிப்படுத்தப்படும்.

அரசாங்கத்தின் எரிபொருள் பாவனையைக் குறைந்தபட்சம் 25 வீதத்தால் குறைக்கும் நோக்கிலேயே, அரச பணியாளர்களுக்கு வாராந்தம் புதன்கிழமைகளில் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. எனவே பொதுமக்கள் எவரும் இது குறித்து அச்சமடையத் தேவையில்லை - என்றார். (அ-ம)

### பகற்பொழுதில்...

10 மணி வரையிலான காலப்பகுதியில் நிலவும் அதிக மின்சாரத் தேவையைக் குறைக்கும் பொருட்டே இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபிள்ளைத்தனமாக செயற்படும் எதிர்க்கட்சி

## ஜெகதீஸ்வரன் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 17

நாட்டுமக்களுக்கு சீரான முறையில் எரிபொருள்களைப் பெற்றுக்கொடுக்கஅரசாங்கம்நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதும், எதிர்க்கட்சியினர் சிறுபிள்ளைத்தனமான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, உலகளாவிய ரீதியில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கையில் ஏப்ரல் மாதம் வரை போதுமான அளவு எரிபொருள் கையிருப்பு உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு எரிபொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் எதிர்க்கட்சியினர் வேற்றுக் கிரகத்திலிருந்து அல்லது வேறு உலகத்தில் இருந்து வந்தவர்கள் போல அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றனர். இவர்கள் தங்களுடைய ஒரு கீழ்த்தரமான, மலிவான அரசியலை மேற்கொள்வதற்காக இவ் வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின் றனர்-என்றார். (க-56)




### அரசாங்க அறிவிப்புக்கு முரணாக

# பாடசாலைக்கு வருமாறு ஆசிரியர்களுக்கு அழுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

எரிபொருள் சேமிப்பை உறுதிப்படுத்தும் வகையில் இன்று அரச விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலையொன்று ஆசிரியர்களை பாடசாலைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான தயார்ப்படுத்தல் பணிகளை முன்னெடுக்கும் நோக்கிலேயே ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்கு வரவேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இந்தத் தயார்ப்படுத்தல் நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 11 . 1942

மறைவு 16 . 03 . 2026

(CS/61005) J-1

## வேலுப்பிள்ளை உருக்குமணி (சரஸ்வதி)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை உருக்குமணி அவர்கள் கடந்த (16.03.2026) திங்கட்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், உதயகுமார், உதயராணி (சுவிஸ்), உதயநந்தினி, உதயறஞ்ஜினி, றஜனகுமார், உதயபவானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பரமானந்தன் (சுவிஸ்), கிஷ்ணபிள்ளை, தேவராஜ் (சுவிஸ்), புனிதமலர், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், அபர்ணா (சுவிஸ்), ஜபி (சுவிஸ்), நவீனா (சுவிஸ்), தீபன்ராஜ், சஜிந்தன், கஜிந்தினி, தேனுஷா (சுவிஸ், தேனுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18-03-2026) புதன்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**அராலி வடக்கு, அராலி.**



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்தில் பந்தல்கால் நாட்டும் வைபவம் நடைபெற்றது. (எ-41-66)

# நெருக்கடிகளைத் தவிர்க்க ஆசிய நாடுகள் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 18

தற்போது நிலவும் விநியோகத் தட்டுப்பாட்டால் உலகின் மிகப்பெரிய எரிபொருள் இறக்குமதி பிராந்திய மான ஆசியா பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நெருக்கடியைக் கையாள இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு புதன்கிழமையும் பொது விடுமுறை அறிவித்துள்ள நிலையில், ஆசிய நாடுகள் பலவும் இந்த நெருக்கடியைக் கையாள நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

மியான்மரில் - தனியார் வாகனங்கள் அவற்றின் இலக்கத்தகடு எண்களின் அடிப்படையில் மாற்று நாள்களில் மட்டுமே இயங்க அனுமதிக்கப்படுகின்றன.

பங்களாதேஷில் மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கில் பல்கலைக்கழகங்களுக்கான ரம்ழான் விடுமுறை முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடு முழுவதும் திட்டமிட்ட மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸில் அரச அலுவலகப் பணியாளர்கள் வாரத்தில் ஒரு நாள் வீட்டிலிருந்தே பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைக்க இத்தகைய கடும் கட்டுப்பாடுகளை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. (எ-இ)

### சிறுமி வன்புணர்ந்தவருக்கு

# 27 வருடங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில், கடந்த 2017ஆம் ஆண்டு 15 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த குற்றவாளிக்கு 27 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த இந்த வழக்கு, யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாஸ் முன்னிலையில் கடந்த 13ஆம் திகதி தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, குற்றவாளிக்கு 27 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு 10 லட்சம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. (ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்18.03. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.